வானவில்

VAANAVIL

இதழ் 163 | ஆடி 2024

ISSUE 163 | July 2024

# ஜனாதிபதித் தேர்தலும் மூன்று முக்கிய பிரச்சினைகளும்!



நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் ஜனாதிபதி தேர்தல் தயாரிப்பில் இருக்கிறார்கள் அல்லது பரபரப்பில் இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க.) தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனக்கு இருந்த பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி 1978 இல் புதிய அரசியல் அமைப்பொன்றை அறிமுகப்படுத்தினார். அந்த அரசியல் அமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

அந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்த போது, “ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் இந்த ஜனாதிபதி முறையால் செய்ய முடியும்” என அதன் அதிகாரத்தை மமதையுடன் வர்ணித்தும் இருந்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு பிறகு கிரமமாக ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று பலர் ஜனாதிபதிகளாக வந்தும் இருக்கிறார்கள். சொல்லப்போனால் ஜே.ஆர். கொண்டு வந்த அரசியல் அமைப்பு சர்வாதிகாரத்தனமாக இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் ஒழுங்காக, காலக்கிரமத்துடன் நடைபெற்று வந்துள்ளன. யுத்தம் நடைபெற்ற காலத்திலும் கூட இந்தத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இது ஒரு வகையில் இலங்கையில் (முதலாளித்துவ) ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி என்றும் கூறலாம்.

ஆனால், தற்பொழுது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் புதியதொரு நிலைமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அதாவது, வழமையாக தென்னிலங்கையின் பிரதான கட்சிகளான ஐ.தே.க., சிறீலங்கா சுதந்திர கட்சி, ஜே.வி.பி. என்பனதான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது வழமை. ஆனால் இம்முறை காட்சி மாறியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழல் காரணமாக பிரதான கட்சிகள் மத்தியிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

ஐ.தே.க. பிளவுபட்டு அதிலிருந்து பிரிந்து சென்ற சஜித் பிரேமதாச தலைமையில் ‘ஐக்கிய மக்கள் சக்தி’ என்ற புதிய கட்சி உதயமாயிற்று. அந்தக் கட்சியே தற்பொழுது

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# இலங்கையின் பொருளாதார நிலைமை

இலங்கையின் பொருளாதாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 2.2 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று உலக வங்கி கணிப்பிட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் 12 சதவீதத்திற்கும் குறைந்த வளர்ச்சி கொண்ட எதிர்மறைப் பொருளாதார நாடாக இருந்த இலங்கை, கடந்த இரண்டு வருடங்களில் 2 சதவீதத்திற்கும் மேற்பட்ட வளர்ச்சியை எட்டியிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நிலைமை சீரடைந்து வருவதாக சர்வதேச நாணய நிதியமும் (Internatinal Monetary Fund) தெரிவித்துள்ளது. இந்த நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே இலங்கை பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தின் முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்று சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 70 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம், கடந்த மாதம் 1.7 சதவீதமாக உள்ளது. கொரொனாவிற்கு பின்னர் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, இலங்கையின் அந்நியச் செலவாணி 5.5 பில்லியன் டொலர்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

2022 இல் பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய பின்னடைவுகளை சந்தித்திருந்த இலங்கைக்கு, சர்வதேச நாணய நிதியம் 2023 மாரச் 20ம் திகதி 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க இணங்கியது. சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கைச்சாத்திட்ட விரிவாக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் இந்த தொகை 4 வருட காலத்தில் 8 தவணைகளில் வழங்கப்படுமென ஒப்புக் கொள்ளப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட செயற்திட்டத்துக்கு அமைய இலங்கைக்கு மூன்றாவது தவணை நிதியினை விடுவிக்க, யூன் மாதம் 11ம் திகதி கூடிய சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மூன்றாவது தவணையாக 336 மில்லியன் டொலர் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. 4 வருடகாலத்தில் 2.9 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கும் திட்டத்தில், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு இதுவரையில் 1 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

இலங்கை பொருளாதார ரீதியில் பின்னடைவுகளை சந்தித்த தருணங்களில் 1965 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலம் மொத்தமாக 17 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. இதில் கடந்த காலங்களில் 9 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளை இடைநடுவில் இலங்கை நிறுத்தியுள்ளது.

"சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்று, அதன் திட்டங்களை அமுல்படுத்திய நாடுகளில் 50 சதவீதமான நாடுகளில்தான், ஓரளவிற்கு அந்தத் திட்டங்கள் வெற்றியளித்துள்ளன. ஏனைய 50 சதவீதமான நாடுகளில் இந்த கொள்கைகள் மிகப்பெரிய தோல்வியைத்தான் சந்தித்துள்ளன. இலங்கை உட்பட பல நாடுகள் இதற்கு உதாரணங்களாகும். வெற்றியளித்த நாடுகளில் 90 சதவீதத்திற்கு அதிகமாக வெற்றியளித்த நாடுகளாக எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று கொழும்பு பல்கலைகழக பொருளியல் துறை பேராசிரியர் எம். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கடன் 49.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இரு தரப்புக் கடன், 11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்புக் கடன், 14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன், 12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை. இதைவிட, இலங்கை 30 பில்லியன் டொலருக்கு அதிகமான உள்நாட்டுக் கடனையும் கொண்டுள்ளது.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இலங்கை கடந்த யூன் 26ம் திகதி வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாரீஸ் நகரில் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டுள்ளது. சீனாவின் எக்ஸிம் (Exim) வங்கியுடன் இலங்கை இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் கடனின் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டு, வெளிநாட்டுக் கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்துவதற்கு 8 ஆண்டுகள் (2043 வரை) அவகாசம் கிடைத்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் சர்வதேச நாணய நிதியம் வளரும் நாடுகளுக்கு கடன் கொடுத்து, தனது கடன் பொறியில் சிக்க வைத்து வருகின்றது. அத்துடன் கடன் பெற்ற நாடுகளில் தனது அழுத்தங்களைப் பிரயோகித்து, நவீன தாராளமயக் கொள்கைகளை திணித்து, உள்நாட்டு வரிகளை அதிகரித்து, பொதுத் துறைகளில் தனியார் முதலீட்டை ஊக்குவித்து அந்நாடுகளின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் சிதைக்கின்றது. எனினும் இலங்கை மீண்டுவர சர்வதேச நாணய நிதியத்திடம் அவர்களின் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் வாங்குவதே ஒரேயொரு தீர்வென்றே பலராலும் வழிமொழியப்படுகின்றது.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமைக்கு 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை, உள்நாட்டு யுத்தம், பாரிய ஊழல் மோசடிகள், மூளைசாலிகளின் வெளியேற்றம், கொரோனா போன்றவையே பிரதான காரணங்களாகும். சர்வதேச நிதி மூலதனம் வளரும் நாடுகளை தமது வலைக்குள் வைத்திருக்கவே சர்வதேச நாணய நிதியத்தையும் உலக வங்கியையும் பயன்படுத்துகிறார்கள். அதிலும் 'பிரிக்ஸ்' நாடுகளின் வளர்ச்சியால், அமெரிக்க மேலாண்மை சரிவு நிலையிலிருக்கும் இக்காலகட்டத்தில், வளரும் நாடுகளின் பொருளாதார நெருக்கடிகள் அவர்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துகின்றது. இந்த உண்மையை புரிந்து இலங்கை மாற்று வழிகளையும் தேட வேண்டும்.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# கறுப்பு யூலை!




யூலை மீண்டும் வந்துள்ளது. இது 12 மாதங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், இலங்கையைப் பொறுத்தவரை, தவறான செயல்களுக்காக கெட்ட ரீதியில் இது பிரபலமான மாதம். 1983 கறுப்பு யூலை அல்லது தமிழர் விரோதப் பேரழிவின் நினைவுகள் முழு நாட்டின் வரலாற்றின் மீதும், எல்லா இலங்கையர்கள் மீதும், குறிப்பாக பெரும்பான்மை சிங்களவர்கள் மீது கரும் புள்ளிகளைக் குத்திய ஒரு இருண்ட காலமாகும்.

அரசின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், அவரது அரசும் எடுத்த குறுகிய நோக்கம் கொண்ட, பொறுப்பற்ற, சிறுபிள்ளைத்தனமான அரசியல் தீர்மானத்தின் விளைவாக 26 ஆண்டுகளாக உலகிலேயே மிக மோசமான இரத்தம் சிந்திய யுத்தத்துக்கு நாட்டை இட்டுச்சென்று, இலங்கையின் இருண்ட அத்தியாயங்களை உருவாக்கி விட்டிருக்கிறது. இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் கிளர்ச்சியாளர்களான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்த யுத்தத்தால் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் ஏற்பட்ட பாதிப்பு நினைத்துப் பார்க்க முடியாததாகும். துரதிஸ்ட்டவசமாக இந்த இந்த இருண்ட யுகத்தின் நிழல்கள் இன்னமும் வன்முறை, கொலைகள், பகல்கொள்ளை, சண்டைகள், அடிப்படை மனித விழுமியங்களுக்கு மதிப்பளிக்காமை எனத் தொடர்வதால் மக்கள் பதட்டத்தில் இருக்கின்றனர். நீண்ட யுத்தத்தின் பக்க விளைவுகளாக ஆயுதப் பயிற்சி பெற்ற திட்டமிட்ட ஒரு பகுதியினர் ஒரு சில ரூபாய்களுக்காக சிக்காக்கோ (Chicago) பாணியிலான ஆயுதக் கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றனர். பொலிசாரும், சட்டத்தை அமுல்படுத்துவோரும் அடிப்படை மனிதாபிமானத்தை மதிக்கத் தவறுவது யுத்தம் தந்துவிட்டுச் சென்ற இன்னொரு பக்க விளைவாக இருக்கின்றது.

1983 யூலை 23 அன்று ஒரு கண்ணிவெடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் 13 இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் கொன்றதற்கான பழிவாங்கல் நடவடிக்கையே கறுப்பு யூலை சம்பவங்களுக்குக் காரணம் என்று சொல்லப்பட்டாலும், அதிகார சக்திகளால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டிருந்த அரசியல் குண்டர்களின் தமிழ் மக்களுக்கெதிரான செயல்பாடுகளே அதற்கான சூழ்நிலையை ஏற்கெனவே உருவாக்கியிருந்தது.

கறுப்பு யூலை சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, 1981 மே 31 அன்று, இரண்டு முன்னணி அரசியல்வாதிகளின் தலைமையில் சில சிங்கள பாதுகாப்புப் படையினரும், 100 பேர் வரையான குண்டர்களும் யாழ்ப்பாணம் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழ் அரசியல் கட்சியொன்றின் பொதுக்கூட்டத்தைக் குழப்பினர். சிங்கள காடையர்கள் பொதுக்கூட்டத்தை குழப்பியது மட்டுமின்றி, தென்னாசியாவிலேயே குறிப்பிடக்கூடிய மிகப்பெரிய யாழ்ப்பாணப் பொதுநூலகத்தையும் முழுவதுமாக தீயிட்டுக் கொளுத்தினர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.எம்.செல்லப்பா என்ற தனிநபரால் 1933ஆம் ஆண்டு தன்னிடம் இருந்த 1,000 புத்தகங்களையும், சில சஞ்சிகைகளையும் கொண்டு ஒரு சிறு அறையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகம், பின்னர் தற்போதைய கட்டிடத்துக்கு 1959இல் மாற்றப்பட்ட பொழுது, அப்போது யாழ்.மாநகர பிதாவாக இருந்த திரு. அல்பிரட் துரையப்பாவால் திறந்து வைக்கப்பட்டது. (பின்னர் துரையப்பாவையும் புலிகள் 1975இல் படுகொலை செய்தனர்) இந்த நூலகத்துக்கான கட்டிட வடிவமைப்பை புகழ்பெற்ற இந்திய நூலகர் எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களின் ஆலோசனைக்கேற்ப இந்தியாவின் பிரசித்தி வாய்ந்த கட்டிடக் கலைஞர் வி.எம்.நரசிம்மன் வடிவமைத்திருந்தார்.

சிங்களக் காடையர்களின் யாழ். நூலக எரிப்பு, ஜேர்மனியில் பேர்லின் நகரில் அரச கலையரங்கத்தில் இருந்த 25,000 நூல்களை ஹிட்லரின் நாஜி படைகள் எரித்ததுக்கு ஒப்பானதாகும்.

1983 யூலை 23 முதல் 30 வரை அரச அனுசரணையுடன் சிங்கள காடையர்களின் கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு சம்பவங்கள் தொடர்ந்தன. அவர்கள் வாக்காளர் பதிவேட்டை வைத்துக்கொண்டு தமிழர்களை இனம் கண்டு அவர்களில் 3,000 தமிழர்களைக் கொலை செய்தனர், 18,000 வீடுகளைச் சூறையாடினர், பெண்களை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். இந்தச் சம்பவங்களால் 100,000 முதல் 150,000 வரையிலான தமிழர்கள் அகதிகளாகினர், 500,000 மேற்பட்ட தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அன்றைய கணிப்பில் இந்த வன்செயல்களால் 300 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன.

இந்த துரதிஸ்ட்டவசமான நிகழ்வு இலங்கைக்கு பெரும் அவமானத்தைக் கொண்டு வந்தது. 1983 டிசம்பரில் சர்வதேச நீதியரசர்கள் இலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகளை, “சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கையில் தமிழர்கள் மீதான சிங்கள கலகக்காரர்களின் வன்முறைகள்

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# அசைத்துப் பார்க்கப்படும் அமெரிக்க டொலர்

உலக நாடுகள் தங்கள் மத்திய வங்கிகள் மூலம் வெளியிடும் பணம், சொந்த நாட்டிலும் இன்னும் ஒரு சில அண்டைநாடுகளிலும் மாத்திரமே செல்லுபடியாகும். ஆனால், அமெரிக்கா வெளியிடும் டொலர் மட்டும் பெரும்பாலான நாடுகளில் செல்லுபடியாகக்கூடிய ஒரு சர்வதேச நாணயமாக இருந்து வருகின்றது.


அதனால், நாடுகள் செய்யும் ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் தங்கள் நாட்டு நாணயத்தில் விலை வைக்காமல், அமெரிக்க டொலரில் விலை வைக்க வேண்டிய நிலை. தற்போது உலக நாடுகளுக்கிடையே நடக்கும் வர்த்தகத்தில் 88% அமெரிக்க டொலரில்தான் நடக்கின்றது

மேலும், பல அரசாங்கங்கள் சேமித்து வைத்திருக்கும் மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பில் 54%, அமெரிக்காவின் மத்திய வங்கியான ‘ஃபெடரல் ரிசர்வின் டிரஷரி பொண்டுகள்’ (Federal Treasury Bonds) தான்.

பெரிய நாடாக இருந்தாலும் முதலாவது பொருளாதாரமாக இருந்தாலும் மற்ற 195 நாடுகளைப் போல அமெரிக்காவும் ஒரு நாடுதானே. அந்த நாட்டின் ‘பணம்’ ஏன் எல்லா நாடுகளிலும் செல்லுபடியாக வேண்டும்? எதற்காக பல நாடுகளும் அதை தங்கள் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பாக சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்? தவிர, ஓர் அமெரிக்க டொலருக்கு ஈடாக இந்தியாவில் 83 ரூபாய் இந்தியப் பணத்தைக் கொடுக்க வேண்டி இருப்பது ஏன்? ஓர் அமெரிக்க டொலருக்கு பாகிஸ்தான் ரூ.278, இலங்கை ரூ.305 ஐ ஈடாக கொடுக்க வேண்டியிருக்கிறது? இவையெல்லாம் எப்போது மாறும்? என்பது போன்ற கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

பிடிக்கிறதோ இல்லையோ, உலகப் பொருளாதாரத்தை, அமெரிக்க டொலரை தவிர்த்து, புரிந்து கொள்ளவோ, வரையறை செய்யவோ, மாற்றவோ இயலாது. அந்த அளவுக்கு அமெரிக்க டொலர் உலகப் பொருளாதாரத்தின் முக்கிய கருவியாகி பல தசாப்தங்கள் ஆகின்றன.

ஆனாலும், அவ்வப்போது, ‘ஆட்டம்



காண்கின்றது’ அல்லது ‘முடிந்தது டொலரின் சாம்ராஜ்யம்’ என்பது போல சில செய்திகள் வரும். மீண்டும் இப்போது அப்படி சிலர் சொல்லக் காரணம், 50 ஆண்டுகளாக நடப்பிலிருந்த ‘பெட்ரோடொலர் ஒப்பந்தம்’ (Petrodollar Agreement) சவுதி அரேபியாவால் நீட்டிக்கப்படவில்லை என்பதுதான்.

இவற்றைப் புரிந்துகொள்ள, அமெரிக்க டொலர் இப்படி ஒரு சர்வதேச இடத்தைப் பிடித்தது எப்படி? என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

***சோ. வள்ளியப்பன்***

இரண்டாவது உலகப் போர் தொடங்குவதற்கு முன்பு வரை, கிட்டத்தட்ட ஒரு நூறு ஆண்டு காலத்துக்கு, பல்வேறு நாடுகளை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த பணக்கார நாடு பிரித்தானியா. அதன் ‘ஸ்டெர்லிங் பவுண்ட்’ (sterling pound) தான், உலக நாடுகளின் ‘ரிசேர்வ்’ (reserve) ஆகப் பயன்படுத்தபட்டது.

ஆறு ஆண்டுகள் நடந்த இரண்டாம் உலகப் போரில் பிரித்தானியா உள்பட பல்வேறு பெரிய நாடுகள் தாக்குதலுக்கு உள்ளாகி, போர் முடிந்தபோது, அவற்றின் பொருளாதாரம் படுபாதாளத்தில் இருந்தன. அமெரிக்கா மட்டும் அதிகம் பாதிக்கப்படாத பெரிய பொருளாதாரமாக இருந்தது.

1944 ஆம் ஆண்டு, ‘நியூ ஹம்ஸையர்’ (New Hamshire) இல் அமைந்திருக்கும் ‘பெரட்டன் வூட்ஸ்’ (Bretton Woods) என்கிற இடத்தில், ஐக்கிய நாடுகளின் நிதி மாநாடு ஒன்று நடந்தது. அதில் 44 நாடுகளின் 730 பிரதிநிதிகள் கலந்து பேசி, சில முடிவுகள் எடுத்து, பெரட்டன் வூட்ஸ் ஒப்பந்தம் (Bretton Woods Agreement) போட்டுக் கொண்டார்கள்.

அதன்படி அமெரிக்க டொலரை நடுநாயகமாக வைத்து, மற்ற நாட்டின் பணங்களுக்கு மதிப்பு கொடுக்கலாம் என்றும், அமெரிக்கா டொலர்களை அச்சடிக்க அதற்கேற்ற அளவு தங்கம் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆரம்ப கணக்குப்படி ஓர் அவுன்ஸ் தங்கம் 35 டொலர்கள் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி அமெரிக்க டொலரைக் கொடுத்தால் (சரண்டர்) அந்த மதிப்புக்கு ஏற்ற தங்கத்தை அமெரிக்க ‘ஃபெடரல்’ தர வேண்டும்.

அப்போது தொடங்கப்பட்டவைதான், இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிற சர்வதேச நிதியம் (International Monetary Fund – IMF) மற்றும் உலக வங்கி (World Bank) ஆகிய இரண்டும்.

சில ஆண்டுகளுக்கு பின், தங்கம் இல்லாமலேயே அமெரிக்கா டொலர் அச்சடித்துக் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு பலமாக எழுந்தது.

பிறகு, 1971 இல் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் (Richard Nixon) “பெரட்டன் வூட்ஸ் ஒப்பந்தம் முடிந்தது,

இனி டொலர் அச்சடிக்க இணையான தங்கம் வைத்துக் கொள்ள முடியாது" என்றார். அதனால் உலக நாடுகள், அமெரிக்க டொலரை பயன்படுத்தாமல் போகக்கூடும் என்பதால், சவுதி அரேபியாவுடன் ஹென்றி கிஸிஞ்சர் (Henry Kissinger) மூலம் ஓர் ஒப்பந்தம் போட்டார்.

உலக கச்சா எண்ணை உற்பத்தியில் பெரும்பங்கு வகித்த சவுதி அரேபியாவிடம், "உங்களுக்கு நாங்கள் இராணுவ பாதுகாப்புத் தருகிறோம். அதற்காக நீங்கள் இனி கச்சா எண்ணையை அமெரிக்க டொலர் கொடுப்பவர்களுக்கு மட்டுமே விற்க வேண்டும்" என்றார், ஹென்றி கிஸிஞ்சர். அமெரிக்காவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான 'பெட்ரோடொலர் ஒப்பந்தம்' ஒப்பந்தம் 1974 ஜூன் மாதம் 8 ஆம் திகதி கையெழுத்தானது.

அதனால் கச்சா எண்ணை வாங்க, அதற்கு கடன் பெற, கப்பலில் கொண்டு செல்ல, அதற்கு காப்பீடு எடுக்க, என்று எதுவானாலும் அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்கப் பணம், அமெரிக்க 'ஸ்விப்ட் பைனான்சியல் சிஸ்டம்' (swift financial system) என்றானது. இப்படியாக, டொலரிற்கு இணையான தங்கம் வைத்துக்கொள்ளாமலேயே அச்சடிக்கப்படும் டொலர், மீண்டும் சர்வதேச நாணயமாகத் தொடர்ந்தது.

50 ஆண்டுகளாக தொடர்ந்த, அந்த 'பெட்ரோ டொலர் ஒப்பந்தம்', 2024 ஜூன் மாதம் வழக்கம் போல நீட்டிக்கப்படவில்லை என்பதுதான் இப்போது வெளிவந்துள்ள செய்தி.

இப்படியாக அமெரிக்க டொலர் பல்வேறு நாடுகளுக்கும் வர்த்தகம் செய்ய தேவைப்படும் ஒரு பணமாக, அந்நியசெலாவணி கையிருப்பாக வைத்துக் கொள்ளக்கூடிய 'டிரஷரி பொண்டாக' (Treasury Bonds) இருப்பதாலும், அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிற, 'ஸ்விப்ட் பைனான்சியல் சிஸ்டம்' (Society for Worldwide Interbank Financial Telecommunication - Swift) பெரும்பாலான உலக வர்த்தகத்தை சாத்தியமாக்குவதாக இருப்பதாலும், அமெரிக்காவுக்கு பலவிதங்களில் ஆதாயம். மற்ற நாடுகளின் பொருளாதார வளங்கள் குறைகிறபோது அமெரிக்கா பாதிக்கப்படாமல் இருப்பது தவிர, சமயத்தில் கூடுதலாக வளரவும் செய்கின்றது.

இவையெல்லாம் தவிர, அதன் ஆதிக்கத்தை எதிர்க்கிற நாடுகளின் பொருளாதாரங்களை முடக்க, அந்த நாடுகள் மீது வர்த்தக தடைகள் மற்றும் 'ஸ்விப்ட் சிஸ்டத்தில்' தடை ஆகியவற்றை அமெரிக்கா செய்து வருகிறது.

இந்த சிக்கல்களில் இருந்து வெளிவர, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய 5 நாடுகள் சேர்ந்து 2009 இல், 'பிரிக்ஸ்' (BRICS) என்ற அமைப்பை உருவாக்கின. 2024 ஜனவரி மாதம் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளும் 'பிரிக்ஸ்' அமைப்பில் சேர்ந்தன. சவுதி அரேபியா மற்றும் மலேசியா ஆகியவை தவிர நேட்டோ உறுப்பு நாடான துருக்கியும் சேர விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

'பிரிக்ஸ்' அமைப்பு, உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியமான ஐ.எம்.எப். (IMF) ஆகியவற்றுக்கு மாற்றாக 'நியூ டெவலப்மெண்ட் பாங்க்' (New Development Bank) ஒன்றை உருவாக்கியுள்ளது. மேலும், அமெரிக்க டொலருக்கு மாற்றாக ஒரு பொது நாணயம், 'ஸ்விப்ட் பைனான்சியல் சிஸ்டம்' இற்கு மாற்றாக வேறு ஒன்று, அமெரிக்க டொலரை அந்நிய செலாவணி கையிருப்பாக வைத்துக் கொள்ளாமல் அதற்கு பதிலாக தங்கம் மற்றும் பிற வலுவான நாட்டு நாணயங்களை, 'பொண்டு'களை வைத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உதாரணமாக, டிசம்பர் 2023 இல் 816 பில்லியன் டொலராக இருந்த சீனாவின் அமெரிக்க டொலர் (பொண்ட்) அந்நியச் செலாவணி கையிருப்பு 2024 இல் 767 பில்லியன் டொலராக குறைந்திருக்கிறது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத குறைந்த அளவு ஆகும்.

அமெரிக்க அரசு விதித்த தடைகளின் காரணமாக ரஷ்யா, 'ஸ்விப்ட்'க்கு மாற்றான, 'சிஸ்டம் ஃபார் டிரான்ஸ்பர் ஒஃப் பைனான்சியல் மெசேஜஸ்' (System for Transfer of Financial Messages - SPFS) என்ற பணம் பரிமாற்ற தகவல் ஏற்பாட்டை உருவாக்கியிருக்கிறது. அதேபோல சீனாவும் 'கிராஸ் பார்டர் இன்டர்பாங்க் பேமென்ட் சிஸ்டம்' (Cross-border Interbank Payment System - CIPS) என்ற ஏற்பாட்டை உருவாக்கியிருக்கிறது. இந்த இரண்டையும் ஒருங்கிணைக்கிற முயற்சிகளும் நடந்து வருகின்றன.

# நேட்டோ படைப்பிரிவுகளை அதிகரிக்கும் நடவடிக்கை

ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவக் கூட்டமைப்பான நேட்டோ 35 முதல் 50 கூடுதல் படைப்பிரிவுகளை உருவாக்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

2024 ஜூலை 5 நேட்டோவின் 75 ஆவது ஆண்டு நிறைவாகும். இதனை முன்னிட்டு ஜூலை 9 – 11 வரை அமெரிக்காவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் பல புதிய திட்டங்களை வகுத்துள்ளார்கள். அவை உலகளவில் நடைபெற்று வரும் போர்களை (உக்ரைன், காஸா) தீவிரப்படுத்தும் வகையிலான திட்டங்களாக இருக்கின்றன. அதில் ஒரு முக்கிய திட்டமாக நேட்டோ படைப்பிரிவுகளை அதிகரிப்பது குறித்து இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. நேட்டோவின் ஒவ்வொரு படைப்பிரிவும் 3,000 முதல் 7,000 இராணுவ வீரர்களை கொண்டுள்ளது.

இந்நிலையில் மேலும் 35 முதல் 50 படைப்பிரிவுகளாக உருவாக்க திட்டமிடுவது உலக அமைதியை அச்சுறுத்துவதுடன், ரஷ்யாவின் பாதுகாப்பை மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி, நேட்டோ நாடுகளுடன் நேரடிப்போரை உருவாக்கிவிடும் ஆபத்து உள்ளது.

2022 ஆம் ஆண்டு முதல் ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனை பகடையாக பயன்படுத்தி ரஷ்யாவுடன் போர் புரிந்து வருவதுடன் நேட்டோ படை மூலம் நேரடிப் போருக்குத் தயாராக உள்ளதாக அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது.

நேட்டோ 35 முதல் 50 படைப்பிரிவுகளை உருவாக்கும் திட்டம் வைத்திருப்பதாக தகவல் வெளியாகி இருந்தாலும் அதற்கான இராணுவ வீரர்களை எந்தெந்த நாடுகள் கொடுப்பது என்ற விவரங்கள்

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# ஜே.வி.பியின் “தொடர் வேலை நிறுத்தங்கள்” என்ற யுக்தி அவர்களையே திருப்பித் தாக்குமா?

***1940***கள் மற்றும் 1950களை லங்கா சமசமாஜக் கட்சியின் (Lanka Sama samaja Party - LSSP) பொற்காலம் எனக் குறிப்பிடலாம். 70 – 80 வீதமான தொழிற்சங்கங்கள் சமசமாஜக் கட்சியினுடையதாக இருந்தன. அதில் ஒரு பிரதான தொழிற்சங்கமான அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் (Government Clerical Service Union – GCSU) சமசமாஜக் கட்சியின் அரசியல் போராட்டங்களை ஆதரித்து வந்தது. 1947 பொது வேலைநிறுத்தம் மற்றும் 1953 ஹர்த்தால் உட்பட 1956 முதல் 1964 வரை தொடர்ந்து வந்த பல வேலைநிறுத்தங்களை டாக்டர் என்.எம்.பெரேராவும் அவரது ‘தோழர்களும்’ தலைமையேற்று நடத்தினர். 1964இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தில் லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் (Communist Party – CP) சேரும்வரை, வேலைநிறுத்தம் என்பது ஒரு பொது நிகழ்வாக இருந்து வந்தது.

சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்த டாக்டர் பெரேரா, அவருக்குச் சொந்தமான கிரிதர மில்லில் (Giridara Mills) ஏற்பட்ட ஒரு வேலைநிறுத்தத்தைச் சமாளிக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலையும் ஏற்பட்டது.

1930 முதல் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல வேலைநிறுத்தங்களை நடத்தி வந்த டாக்டர் பெரேராவுக்கு சிறீமாவோவின் 1970 – 75 ஆட்சிக்காலத்தில் இரண்டாவது தடவையாக நிதியமைச்சராக இருந்தபோது, 1972 செப்ரெம்பரில் வங்கி ஊழியர்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தம் குறிப்பிடக்கூடிய சவாலான நிலைமை ஒன்றை ஏற்படுத்தியது. பலம் வாய்ந்த இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட, இலங்கையின் வரலாற்றிலேயே நீண்டகாலம் நீடித்த 108 நாள் வேலைநிறுத்தம் பொருளாதாரத்துக்கு சொல்ல முடியாத இழப்பை ஏற்படுத்தியது. தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு டாக்டர் பெரேரா கடுமையான நடவடிக்கைகள் மூலம் பதிலளித்தார். இப்பொழுது ஜே.வி.பி. அதிகாரத்துக்கு வந்தால் அதே மாதிரியான சவால்களுக்கு முகம் கொடுக்க நேரும். அவர்கள் தமது முன்னோர்களின் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டு, பொருளாதார முன்னேற்றத்தையும் ஸ்திரத்தன்மையையும் பேணும் வகையில் கப்பலைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்படும்.



---

**கேகேஎஸ் பெரோரா**
**(KKS Perera)**

---

பணப் பற்றாக்குறையால் அவதிப்படும் அரசாங்கமொன்று வேலைநிறுத்தக்காரர்களின் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுமானால், அடுத்த தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், ஒரு சில மாதங்களிலேயே கடுமையான பொருளாதார அழிவுக்கு முகம் கொடுக்க நேரிடும். அத்துடன், புதிய நிர்வாகம் தொடர்ந்தும் போராட்ட அல்லது கிளர்ச்சி செய்யும் மனநிலையிலுள்ள உழைப்பாளர்களின் சவாலையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நாடு ஒரு உள்நாட்டு யுத்தத்தில் இருந்த நேரத்தில் 2008 யூலை 10இல் மேற்கொள்ளப்பட்ட நாடு தழுவிய வேலைநிறுத்தம் பெரும் வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியது. எதிர்பாராத எரிபொருள் விலை உயர்வால் உள்ளூர் வர்த்தகம் குழப்ப நிலையை அடைந்தது. இந்தச் சூழ்நிலையில் ஜே.வி.பி. யினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைநிறுத்தத்தை பலர் ஆதரிக்காத அதேநேரத்தில், ராஜபக்சாக்களின் யுத்த முயற்சிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த வேலைநிறுத்தம் போக்குவரத்து, மின்சாரம், வங்கி மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இது ஏற்கெனவே பாதிப்புக்கள்ளாகியிருந்த தனியார்துறை உற்பத்திகளுக்கும், வர்த்தகத்திற்கும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

1980ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினதும், பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாசவினதும் ஆட்சியின் போது நடைபெற்ற ஒரு வேலைநிறுத்தம் சம்பந்தமாக அவர்களது அரசாங்கம் எடுத்த நடவடிக்கையால் 41,800 பேர் ஒரே நாளில் தமது வேலையை இழந்தனர். இந்த வருடம் (2024) யூலை மாதம் 1980 பொது வேலைநிறுத்தத்தின் 44ஆவது ஆண்டு நிறைவாகும். அப்பொழுது ஏற்பட்டிருந்த விலைவாசி உயர்வு காரணமாக தமது மாதச் சம்பளத்தை 300 ரூபாவால் அதிகரிக்கும்படியும், வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு ஏற்ப ஒரு புள்ளிக்கு 5 ரூபாப்படி வழங்கும்படியும் தொழிலாளர்கள் கோரினர். ஆனால் அரசாங்கம் தனக்கிருந்த பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் அடக்கியொடுக்கியது.

*1980* மார்ச்சில் *1,024* தொழிற்சங்க பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கூடிய தொழிற்சங்கங்களின் தேசிய மாநாடு, *1980* யூன் 5ஆம் திகதி மதியபோசன வேளையில் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதெனத் தீர்மானித்தது. ஒரு பொது வேலைநிறுத்தம் நடத்தப்படுமானால், வேலை நிறுத்தக்காரர்கள் வேலையிலிருந்து நீங்கியதாக கருதப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை செய்தது. அதேநேரத்தில் நாடு முழுவதும் அவசரகால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டது. *1980* யூன் 5ஆம் திகதி ஒரு பொது வேலைநிறுத்தத்துக்கான தயாரிப்பாக மதியபோசன நேர ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போது, அரசாங்க விநியோக திணைக்களத்திலிருந்தும், லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திலிருந்தும் வந்த இரண்டு கும்பல்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கற்கள், சைக்கிள் செயின், தடிகள் என்பனவற்றால் தாக்குதல் நடத்தினர். நிலைமை குழப்ப நிலையை அடைந்த பொழுது வீசப்பட்ட ஒரு கைக்குண்டால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விநியோகத் திணைக்களத்தைச் சேர்ந்த டி.சோமபால (D.Somapala) என்பவர் கொல்லப்பட்டார்.

ஒரு குழு ஜீப் ஒன்றில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கற்களை வீசிய நேரத்தில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. பலாத்கார நிகழ்வுகளின் காரணமாக ஒருவர் இறந்ததாக பொலிசார் அறிவித்தனர். தாக்குதலில் ஈடுபட்ட ஜீப்பின் முன் ஆசனத்தில் அரசாங்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மெரில் காரியவாசம் (Merril Kariyawasam) அப்பொழுது இருந்ததாகத் தெரிய வந்தது.

*1980* யூலை வேலைநிறுத்தத்தில் ஏறத்தாழ *90,000* பேர் பங்குபற்றியதுடன், அதன் காரணமாக அரசாங்க நிர்வாகச் செயல்பாடுகளும், நாளாந்த அத்தியாவசிய சேவைகளும் பாதிப்புக்குள்ளாயின. *1980* யூலை *24* அன்று பிரதமர் ரணசிங்க பிரேமதாச, வேலைக்கு சமூகமளிக்காத *41,000* பேர் வேலையை இழந்துள்ளார்கள் என அறிவித்தார். இந்த அறிவித்தலைத் தொடர்ந்து, வேலைநிறுத்தத்தில் முன்னணியில் நின்ற தொழிற்சங்கவாதிகளான வாசுதேவ நாணயக்கார, அலவி மௌலானா, டாக்டர் விக்கிரமபாகு கருணரத்ன, ஜீ.ஐ.டி.தர்மசேகர ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். பொது வேலைநிறுத்தத்தை நசுக்குவதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் *1980* ஓகஸ்டில் நீக்கப்பட்டது.

வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து பல தொழிலாளர்கள் அனாதரவாகிப் போயினர். வேலை நிறுத்தம் காரணமாகத் தமது குடும்பங்களைக் கொண்டு நடத்த முடியாத *56* வேலை நிறுத்தக்காரர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுமக்களையோ, வாகனங்களையோ தடுத்தால், அது ஒரு குற்ற நடவடிக்கையாக பொலிசாரால் கருதப்படும். ஆயுதங்களை வைத்திருந்தால், சொத்துகளுக்கு சேதம் விளைவித்தால், பயமுறுத்தல் விடுத்தால் அவையும் சட்ட விரோத நடவடிக்கையாகக் கருதப்படும். இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், எமது நாட்டில் தொழிற்சங்கங்கள் திடீர் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுவதற்கு எதிராக கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. இந்தக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் சில வேளைகளில் தொழிற்சங்கங்கள் பொறுப்பில்லாது செயற்பட்டு, அதன் காரணமாக நாடு பாதிப்படைய நேரிடுகிறது. கட்சி நலன்களுக்கு மேலாக நாட்டினதும், மக்களினதும் நலன்களை வைப்பது அவசியமானது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டும் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும்.

(கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரையின் முக்கியமான பகுதிகள்)

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

வெளியாகவில்லை. தேவைப்பட்டால் இருக்கும் வீரர்களையே பல பிரிவுகளில் இருந்து பிரித்து புதிய பிரிவுகளை உருவாக்கலாம் அல்லது கூடுதல் வீரர்களை நியமிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

மேலும் ரஷ்யாவுடன் போரை தொடங்கினால், வடகொரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளும் போரில் ஈடுபடலாம் அவ்வாறு நடந்தால் அந்நாடுகளின் ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொள்ள ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை அதிகளவு உருவாக்க நேட்டோ திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தென்னாப்பிரிக்கா, ஈரான், இந்தியா மற்றும் மத்திய கிழக்கு, தெற்காசியாவில் உள்ள வளரும் நாடுகள் தங்கள் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய ஒத்துழைப்புக்களை உருவாக்குவதுடன், உலக அமைதியை வலியுறுத்தி போர் நிறுத்தத்திற்கும் அழைப்பு விடுத்து வருகின்றன.

இவ்வேளையில் ஒட்டுமொத்த உலகிலும் நாங்கள் மட்டுமே மனிதாபிமானம் மிக்க நாடுகள் என்ற பிம்பத்தை கட்டமைத்துக்கொண்டே அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மேற்கு நாடுகள் நேட்டோ மூலம் போர்ச்சூழலை தீவிரப்படுத்தி, உலக அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன.

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

தெளிவாக இதுவொரு இனப்படுகொலை எனக் காட்டுகிறது'' எனப் பிரகடனம் செய்தனர்.

இலங்கையின் சரித்திரத்தில் நடைபெற்ற இந்த இருண்ட சம்பவம் நடைபெற்று நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும், பல சந்ததிகள் அதற்கான விலையைக் கொடுத்துள்ளதுடன், வருங்காலச் சந்ததிகளும் கொடுக்க வேண்டி இருக்கும். ஒரு காலத்தில் இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்பட்ட இலங்கை இன்று பொருளாதார நெருக்கடி மிகுந்த, ஏழ்மையான, வங்குரோத்தான ஒரு நாடாக இந்தப் பிராந்தியத்தில் திகழ்கின்றது.

இலங்கை பல சோதனைகளையும் இன்னல்களையும் கடந்து வந்துள்ளது. அத்துடன் செய்த தவறுகளிலிருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய சத்தியத்தின் தருணம் வந்துவிட்டது.

அந்த வகையில் ''கறுப்பு யூலை'' என்பது எல்லோருக்கும் மிகவும் முக்கியமானதில் ஒன்றாகும்.

(இது *2024* யூலை *13* ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியான 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகளாகும்)

# குழந்தைகளின் நரகமாக மாற்றப்பட்ட காஸா




இஸ்ரேலின் இனப்படுகொலை தாக்குதலால் காஸா முழுவதும் குழந்தைகளின் மரண ஓலங்களை எதிரொலிக்கும் ‘நரகமாக’ மாறிவிட்டது.

காஸாவில் உள்ள 22 இலட்சம் மக்கள் தொகையில் 40 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் 18 வயதுக்கு குறைவான குழந்தைகள் ஆவர். இவர்களில் பலரும் பிறந்தது முதலே இஸ்ரேலின் குண்டு வீச்சுகளை எதிர்கொண்டு வருகிறார்கள். 2023 ஒக்ரோபரில் போர் துவங்கிய பிறகு அவர்கள் மிக மோசமான சூழலை எதிர்கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக போரின் காரணமாக குழந்தைகள் அதிர்ச்சி, கவலை, மோசமான கனவுகள், மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை உட்பட பல பாதிப்புகளை எதிர் கொண்டு வருகின்றனர். இது அவர்களுக்கு மோசமான பாதிப்புகளை உருவாக்கி வருகிறது. இந்த மோசமான மனப்பாதிப்புகளில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க காஸாவில் உள்ள இளைஞர்கள், ஐ.நா நிவாரண ஊழியர்கள் தன்னார்வத்துடன் சில விளையாட்டுகளில் குழந்தைகளை ஈடுபடுத்தி வருகின்றனர்.

தெற்கு காஸா பகுதியில் பாதுகாப்பு பகுதி என அறிவிக்கப்பட்ட அல்–மவாசி (al–Mawasi) என்ற பலஸ்தீன மக்கள் தங்கியுள்ள முகாம் மீது ஜூலை 13 அன்று இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 90 பலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சுமார் 300 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

**சேது சிவன்**

அவ்வாறு ஏராளமான பலஸ்தீன அகதிகள் தங்கியுள்ள தெற்கு காஸா பகுதியின் அப்பாசன் (Abbasan) எனும் நகரில் உள்ள அல்–அவ்தா் (al-Awdah) பள்ளிக்கூடத்தின் மைதானத்தில் ஜூலை 9 அன்று பலஸ்தீன இளைஞர்கள் கால் பந்து விளையாடி கொண்டிருந்தனர். அதனை நூற்றுக்கணக்கானவர்கள் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென இஸ்ரேல் இராணுவம் அப்பள்ளி மீது ஏவுகணைகளை வீசி மிக மிகக் கொடூரமான தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். 53 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள். கால்பந்து விளையாட்டு மற்றும் தாக்குதல் நடந்த போது எடுக்கப்பட்ட காணொலியை அல் ஜசீரா (Al Jazeera) ஊடகம் வெளியிட்டிருந்தது. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்த தாக்குதலுக்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஐரோப்பிய ஒன்றிய தலைவர் ஜோசப் பொரெல் (Joseph Borrell) தனது ‘எக்ஸ்’ தளத்தில் “இன்னும் எத்தனை நாட்களுக்குதான் அப்பாவி மக்கள் இந்த போரின் விளைவுகளை சுமப்பார்கள்?” என கேள்வி எழுப்பியுள்ளார்.

**மற்றொரு படுகொலை**

அதே நாளில் காஸாவில் இருக்கும் புருஜீ (Bureij) அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் இராணுவத்தால் 17 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 14 பேர் குழந்தைகள். ஒட்டு மொத்தமாக காஸா பகுதியில் ஜூலை 9 அன்று மட்டும் 77 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை காஸா பகுதியில் மட்டும் 2023 ஒக்ரோபர் முதல் 38,243 பலஸ்தீனர்களை இஸ்ரேல் இனப்படு கொலை செய்துள்ளது. 88,243 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் 70% பேர் குழந்தைகள் மற்றும் பெண்கள். இதேவேளையில் ‘லான்செற்’ (Lancet) இதழின் ஆய்வு, இதுவரை காஸாவில் 1.86 இலட்சம் பேரின் உயிர் பறிக்கப்பட்டிருக்கலாம் என்ற அதிர்ச்சி விபரத்தை வெளியிட்டுள்ளது.

**உலகை உலுக்கிய கொலை**

ஜனவரி 29 அன்று இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீன மக்களை தெற்கு ரஃபா (Rafah) எல்லையை நோக்கிச் செல்லுமாறு மிரட்டி வந்த சமயத்தில் பலரும் குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்தனர். அப்போது ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் தெற்கு நோக்கி தங்கள் காரில் செல்ல முயன்றனர். அப்போது இஸ்ரேல் குண்டுவீச்சில் உயரமான கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவர்கள் நேரடியாக

தெற்கு நோக்கிச் செல்ல முடியவில்லை. வடக்கு நோக்கிச் சென்று மாற்றுப்பாதையில் தெற்கு பகுதிக்கு செல்லவேண்டிய சூழல் உருவானது.

அப்போது இஸ்ரேல் இராணுவத்தின் மெர்காவா பீரங்கிகள் உட்பட இஸ்ரேலின் இராணுவ வாகனங்கள் அந்த காரை சுற்றி வளைத்தன. காரின் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தின. அப்போது அந்த காரில் இருந்த ஹிந்த் ரஜப் (Hind Rajab) என்ற ஆறு வயது குழந்தை பலஸ்தீன செஞ்சிலுவை சங்கத்தின் அவசரகால பணியாளர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "எனது பெற்றோரை கொலை செய்து விட்டார்கள். இஸ்ரேல் இராணுவத்தின் பீரங்கிகள் என்னை நோக்கி வருகிறது. எனக்கு பயமாக இருக்கிறது என்னை காப்பாற்றுங்கள்" என அலறித்துடித்து பேசியுள்ளான். சில நொடிகள் மட்டுமே அவர் பேசிய நிலையில் தொடர்பு துண்டிக்கப்பட்டார். குழந்தை பேசிய பதிவுகள் கடந்த ஜனவரி மாதம் வெளியாகி உலகை உலுக்கியது.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, பெப்ரவரி 10 அன்று, ஹிந்த் ரஜப்பின் இறந்த உடல் அவரது குடும்பத்தினரின் உடல்களுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது.

அமெரிக்க வெளியுறவுத்துறை மற்றும் இஸ்ரேல் இராணுவம் இரண்டும் அந்த நேரத்தில் அந்த பகுதியில் எந்த பீரங்கிகளும் இயங்கவில்லை என்று பொய் சொல்லின.

ஆனால் அந்த காரில் நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து இங்கிலாந்தைச் சேர்ந்த தடயவியல் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய விசாரணையின்படி அந்த காரில் 355 குண்டுகள் வீசப்பட்டுள்ள பேரதிர்ச்சித் தகவல் வெளியானது.

**தினந்தோறும் படுகொலைகள்**

1) ஜூன் 14 காஸாவின் ஸெய்ரவுன் (Zeitoun) நகரில் இஸ்ரேல் விமானத் தாக்குதல்களால் ஒரு குழந்தை படுகொலை செய்யப்பட்டது.

2) ஜூன் 22 காஸாவின் ஸஜாயா (Shujaiya) நகரில் இஸ்ரேல் இராணுவ விமானத்தால் இரண்டு குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டனர்.

3) ஜூன் 25 அல்–ஷி:பா (al-Shifa) மருத்துவமனைக்கு அருகில் உள்ள அல்–வஹ்தா (al-Wahda) தெருவில் இஸ்ரேல் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டனர்.

4) ஜூன் 25 அல்–மகாசி (Al-Maghazi) அகதிகள் முகாமில் இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களால் மூன்று குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த குழந்தைகளில் பெரும்பாலோர் 10 வயதைக் கூட எட்டவில்லை. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் போது இஸ்ரேல் வீசிய தொடர் குண்டு வீச்சில் கிட்டத்தட்ட 3 இலட்சத்து 73 ஆயிரம் குழந்தைகளுக்கு "உடனடி உளவியல்–சமூக முதலுதவி" தேவை என்று அப்போதே ஐ.நா குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) காஸா அலுவலக உதவி இயக்குனர் பெர்னில் அயர்ன்சைட் (Pernille Ironside) குறிப்பிட்டிருந்தார்.

2024 மே மாதம் ஐ.நா. குழந்தைகள் நிதியம் இயக்குனர் கத்தரின் ரஸ்ஸல் (Catherine Russell) "கிட்டத்தட்ட காஸாவின் அனைத்து குழந்தைகளும் போரின் அதிர்ச்சிகளுக்கு ஆளாகியுள்ளனர், அதன் விளைவுகள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்" என தெரிவித்திருந்தார். மேலும் அவர் காஸாவில் 14,000 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் 17,000 குழந்தைகள் பெற்றோர் இன்றி அல்லது போரின் காரணமாக பிரிந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் கூறினர். (இந்த மதிப்பீடு எண்ணிக்கை குறைவாகக் கூட இருக்கலாம்)

தற்போது காஸாவில் குழந்தைகள் அனுபவிக்கும் இஸ்ரேலின் வன்முறைகள் தினசரி நிகழ்வாகி விட்டது. பல குழந்தைகள் அச்சத்தில் மன அழுத்தத்தில் இரவில் கண்விழித்துக் கதறுகிறார்கள் என அங்குள்ள பெற்றோர்கள் தெரிவித்துள்ளதை சில பத்திரிகையாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

**கால்களை இழந்த குழந்தைகள்**

அல் ஜசீரா இணையதளம் ஒக்டோபர் 2023 முதல் இஸ்ரேல் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகளின் பெயர்களைப் பதிவு செய்துள்ளது. ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் ஒரு பலஸ்தீன குழந்தை இஸ்ரேல் இராணுவத்தால் கொலை செய்யப்படுகிறது.

மேலும் அந்நிறுவனம் பதிவு செய்துள்ள பெயர் பட்டியலின் இறுதியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது: "இவை கொல்லப்பட்ட குழந்தைகளில் பாதிப்பேரின் பெயர்கள் மட்டுமே."

சமீபத்தில் காஸாவில் 20,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் காணாமல் போயுள்ளதாகவும் அவர்கள் கட்டிட இடிபாடுகளுக்குள் புதையுண்டுள்ளதாகவும் 'சேவ் தி சில்ரன்'(Save the children) நிறுவனத்தின் புதிய அறிக்கை கூறியது. ஐ.நா. பலஸ்தீன அகதிகள் அமைப்பின் கமிஷனர்–ஜெனரல் பிலிப் லஸ்ஸரினி ஜூன் 25 அன்று காஸா குழந்தைகள் பற்றிய மற்றொரு அதிர்ச்சித் தகவலை உலகிற்கு கொடுத்தார். அதாவது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால் ஒவ்வொரு 10 நாட்களுக்கும் குழந்தைகள் சராசரியாக ஒரு கால் அல்லது இரண்டு கால்களை இழந்து வருகிறார்கள் என்றார்.

மேலும் நிவாரண வாகனங்களை இஸ்ரேல் தடுத்து வைத்து இருப்பதால் மயக்க மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடு உள்ளதால் மயக்க மருந்துகள் கூட கொடுக்காமல் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி யுள்ளது. பல நேரங்களில் குண்டு வீச்சில் பாதிக் கப்பட்ட குழந்தைகளின் உயிரை காப்பாற்ற மயக்க மருந்து இன்றி கால்களை அகற்ற வேண்டிய சூழலும் உருவாகியுள்ளதை மருத்துவர்கள் பதிவு செய்துள்ளனர்.

உலகின் பல இடங்களில் நடைபெறும் போர்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை பெரிதும் பாதிக்கிறது. அவ்வகையில் காஸா மீது இஸ்ரேல் நடத்தும் போரில் பலஸ்தீன குழந்தைகளின் ஒட்டு மொத்த எதிர்காலம் அழிக்கப்பட்டு விட்டதுடன் காஸா குழந்தைகளின் நரகமாக மாற்றப்பட்டுவிட்டது. அழிவுகளுக்கு நடுவில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கண்டுபிடிக்க தீவிரமாக முயற்சிக்கையில், ஏவுகணைகள், தோட்டாக்கள் மற்றும் வெடிக்காத குண்டுகளுக்கு தங்கள் உயிர்களைப் பணயம் வைக்கிறார்கள்.

***தகவல் ஆதாரம்: அல் ஜசீரா, பீப்பிள்ஸ் டிஸ்பாட்ச் (peoplesdispatch)***

# அமெரிக்க ஜனாதிபதிகள், ஜனாதிபதி வேட்பாளர்கள்: படுகொலைகளும், கொலைமுயற்சிகளும்!

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது கடந்த ஜூலை 13ந் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் அவர் காதில் குண்டு பட்டு, மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படும் நபரை அமெரிக்க சிறப்புப் பாதுகாப்புப் படையினர் உடனடியாகவே சுட்டுக் கொன்றனர்.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறும் அமெரிக்காவின் 60 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் போட்டியிடவுள்ள டிரம்ப், பென்சில்வேனியா(Pennsylvania)வில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில் தோமஸ் மத்தியூ குறூக்ஸ் (Thomas Matthew Crooks) என்ற 20 வயது இளைஞர் ஒருவரால் இந்தத் துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டுள்ளது.




அமெரிக்கா ஒரு தேசமாக உருவானதிலிருந்து இதுவரை அமெரிக்க ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள் மீது நிகழத்தப்பட்ட வன்முறை சம்பவங்கள் குறித்த ஒரு சுருக்கமான பார்வை:

## படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்

### ஆபிரகாம் லிங்கன் (16 ஆவது ஜனாதிபதி)

ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln), அமெரிக்க ஜனாதிபதிகள் வரலாற்றில் படுகொலை செய்யப்பட்ட முதல் ஜனாதிபதியாவார். ஏப்ரல் 14, 1865 அன்று லிங்கன் தனது மனைவி மேரி டோட் லிங்கன் (Mary Todd Lincoln) உடன் வாஷிங்டனிலுள்ள ஃபோர்ட் (Ford) திரையரங்கில் சிறப்பு நகைச்சுவை நாடகம் ஒன்றினைக் காணச் சென்றபோது ஜோன் வில்கிஸ் பூத் (John Wilkes Booth) எனும் மேடை நாடக நடிகரால் தலையில் சுடப்பட்டு இறந்தார்.

சுடப்பட்டதும் அரங்கின் அருகேயுள்ள வீட்டில் மருத்துவ உதவிகளுக்காக அழைத்துச் செல்லப்பட்ட லிங்கன் மறுநாள் காலை உயிரிழந்தார்.

கொல்லப்படுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு அடிமைத்தனத்திற்கு எதிரான உள்நாட்டுப் போரில் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கி விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார் லிங்கன். அவர் கறுப்பின மக்களின் உரிமைகளுக்கு ஆதாரவாக இருந்ததே கொலைக்கான காரணமாகக் குறிப்பிடப்பட்டது.

லிங்கனைக் கொலை செய்த பூத் ஏப்ரல் 26, 1865 அன்று விர்ஜீனியா (Virginia) இல் தலைமறைவாக இருந்தபோது பிடிபட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

லிங்கனுக்குப் பிறகு துணை ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜோன்சன் (Andrew Johnson) அதிபராகப் பதவியேற்றார்.

### ஜேம்ஸ் கார்ஃபீல்டு (20 ஆவது ஜனாதிபதி)

ஜேம்ஸ் கார்ஃபீல்டு (James Garfield) ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஆறு மாதங்களில் படுகொலை செய்யப்பட்டார்.

ஜூலை 2, 1881 அன்று வாஷிங்டனிலிருந்து நியூ இங்கிலாந்து செல்லும் தொடர்வண்டியைப் பிடிக்கச் செல்கையில் சார்லஸ் கைட்டோ (Charles Guiteau) என்பவரால் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம்பெல் (Alexander Graham Bell), அமெரிக்க ஜனாதிபதிக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட உலோகம் கண்டறியும் சாதனத்தைக் கொண்டு அவரது மார்பில் துளைத்த குண்டினை கண்டுபிடிக்க முயன்று தோற்றார்.

படுகாயமடைந்து வெள்ளை மாளிகையில் பல வாரங்கள் படுக்கையில் கிடந்த ஜனாதிபதி கார்ஃபீல்டு, செப்டம்பரில் நியூ ஜெர்சி கடற்கரைக்கு அழைத்துச் சென்றபோது மரணமடைந்தார்.

கார்ஃபீல்டுக்குப் பிறகு துணை ஜனாதிபதி செஸ்தர் ஆர்தர் (Chester Arthur) ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

குற்றவாளி சார்லஸ் கைட்டோ குற்றம் நிரூபிக்கப்பட்டு ஜூன் மாதம் 1882 இல் தூக்கிலிடப்பட்டார்.

### வில்லியம் மெக்கின்லி (25 ஆவது ஜனாதிபதி)

வில்லியம் மெக்கின்லி (William McKinley) செப்டம்பர் 6, 1901 அன்று நியூயார்க்கில் உரையாற்றிய பின்னர் மக்களுடன் கைகுலுக்கிக்

கொண்டிருந்தபோது கூட்டத்தில் இருந்த நபரால் இருமுறை மார்பில் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

மருத்துவர்கள் மெக்கின்லியைக் காப்பாற்றப் போராடியபோதும் இரத்த ஓட்டம் குறைந்ததால் செப்டம்பர் 14, 1901 அன்று பலியானார். இரண்டாவது முறை ஜனாதிபதியாகப் பதவியேற்று 6 மாதங்கள் ஆகியிருந்த நிலையில் மெக்கின்லி இறந்து போனார்.

அவருக்குப் பின் துணை அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) அதிபராகப் பதவியேற்றார்.

குற்றவாளி லியோன்.எ∴ப்.சோல்கோஸ் (Leon F. Czolgosz) குற்றத்தை ஒப்புக்கொண்ட பின் ஒக்ரோபர் 29, 1901 அன்று மின்சார நாற்காலியில் அமரவைத்துக் கொல்லப்பட்டார்.

**ஜோன்.எ∴ப்.கென்னடி (35 ஆவது ஜனாதிபதி)**

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்.எ∴ப்.கென்னடி தனது மனைவி ஜாக்குலின் கென்னடியுடன் 22 நவம்பர் 1963 அன்று டல்லஸ் (Dallas) பகுதியில் நடந்த வாகன அணிவகுப்பில் கலந்துகொண்டபோது, அங்கு மறைந்திருந்த மர்மநபர் உயர்ரக சினைப்பர் (sniper) துப்பாக்கியால் சுட்டதில் கென்னடி பலியானார்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சிறிது நேரத்தில் லீ ஹார்வே ஒஸ்வால்ட் (Lee Harvey Oswald) என்ற குற்றவாளியை அருகிலிருந்த கட்டடத்தில் வைத்து போலீஸார் கைது செய்தனர். இரு நாள்களுக்குப் பிறகு, குற்றவாளியை ஜெயிலில் அடைக்கக் கூட்டிச் சென்றபோது டல்லஸ் (Dallas) பகுதியின் இரவு விடுதி உரிமையாளர் ஜாக் ரூபி (Jack Ruby) குற்றவாளியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

துணை அதிபர் லிண்டன்.பி.ஜோன்சன் (Lyndon B. Johnson) என்பவர் கென்னடிக்கு பின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஆகாயப்படை விமானத்தில் பதவிப் பிரமாணம் செய்த ஒரே அதிபர் இவரே.

**ரொபர்ட்.எ∴ப்.கென்னடி (ஜனாதிபதி வேட்பாளர்)**

ரொபர்ட்.எ∴ப்.கென்னடி (Robert F. Kennedy) அமெரிக்காவின் நியூயார்க் மேலவை உறுப்பினராக பணியாற்றியவர். இவர், சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜோன்.எ∴ப்.கென்னடியின் சகோதரராவார்

அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த கென்னடி 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 6ந் திகதி லொஸ் ஏஞ்சலஸ் (Los Angeles) இல் உள்ள ஹோட்டலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐந்து நபர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

1967 இல் மத்திய கிழக்கில் நடந்த 6 நாள் போரில் இஸ்ரேலுக்கு ஆதரவாக கென்னடி குரல் கொடுத்ததற்காகவே, 24 வயதான சிர்ஹான் (Sirhan) என்கிற பலஸ்தீனரால் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். சிர்ஹானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. கடந்தாண்டு (2023), விடுதலை செய்வதற்கான மனு நிராகரிக்கப்பட்டு சிர்ஹான் சிறையில் உள்ளார்.

## படுகொலை முயற்சியில் தப்பித்த ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள்

**∴பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் (32 ஆவது ஜனாதிபதி)**

அமெரிக்காவில் இருமுறைக்கு மேல் ஜனாதிபதியாக இருந்த ∴பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் (Franklin D. Roosevelt), நீண்ட காலம் பதவி வகித்த ஒரே ஜனாதிபதியாவார்.

மியாமி நகரில் 1944 இல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வில் பேசுகையில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. ஆனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

அதற்கு முன்னர் 1933 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ந் திகதி நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் சிக்காகோ மேயர் அன்ரன் செர்மாக் (Anton Cermak) கொல்லப்பட, ரூஸ்வெல்ட் காயங்களின்றி தப்பித்தார்.

இதில், குற்றவாளி குசிப்பே ஸங்காரா (Giuseppe Zangara) தூக்கிலிடப்பட்டார்.

**ஹரி எஸ்.ட்ரூமேன் (33 ஆவது ஜனாதிபதி)**

1950 ஆம் ஆண்டு நவம்பரில் ஹரி எஸ்.ட்ரூமேன் (Harry S. Truman) வெள்ளை மாளிகையின் எதிரே உள்ள பிளையர் ஹவுஸ் (Blair House) இல் தங்கியிருந்த போது இரண்டு நபர்கள் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தனர்.

அவர்களுக்கும் வெள்ளை மாளிகை பொலீஸாருக்கும் நடைபெற்றத் துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ்காரர் ஒருவரும் (Leslie Coffelt), தாக்குதலில் ஈடுபட்ட நபர்களில் ஒருவரும் (Griselio Torresola) கொல்லப்பட்டனர். மேலும், இரு பொலீஸார் படுகாயமடைந்தனர். ஜனாதிபதி ட்ரூமேன் காயங்களின்றி உயிர்தப்பினார்.

ஒஸ்கர் கொலஸோ (Oscar Collazo) என்கிற மற்றொரு குற்றவாளி கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1952 இல் ட்ரூமேன் அந்தத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். பின்னர், 1979 இல் ஜிம்மி கார்டர் (Jimmy Carter) ஜனாதிபதியானபோது குற்றவாளியை விடுதலை செய்தார்.

**ஜெரால்ட் ∴போர்ட் (38 ஆவது ஜனாதிபதி)**

ஜெரால்ட் ∴போர்ட் (Gerald Ford) மீது 1975 ஆம் ஆண்டில் ஒரே மாதத்திற்குள் இருமுறை கொலைமுயற்சி நடந்து, இரு முறையும் காயங்களின்றி தப்பித்தார்.

முதல் முயற்சியில், 05.09.1975 அன்று கலி∴போர்னியா ஆளுநரைச் சந்திக்கச் சென்றபோது சார்ல்ஸ் மேன்சன் (Charles Manson) இன் விசுவாசி ஒருவர் கூட்டத்திலிருந்து துப்பாக்கியால் ∴போர்டைச் சுடுவதற்கு முற்பட, துப்பாக்கி வேலை செய்யாததால் பாதிப்பு ஏற்படவில்லை.

சுட முயன்ற ∴ப்ரோம்மி (Fromme) என்ற நபர் 34 வருட சிறைவாசத்திற்குப் பின் விடுவிக்கப்பட்டார்.

அந்தச் சம்பவம் நடந்து 17 நாள்களுக்குப் பின், சாரா ஜேன் மூர் (Sara Jane Moore) என்ற பெண் சான் ∴பிரான்சிஸ்கோ (San Francisco) இலுள்ள சென் ∴பிரான்சிஸ் (St. Francis) என்ற ஹோட்டலின் வாசலில் ஜனாதிபதி ∴போர்டை மறித்துத் துப்பாக்கியால் சுட முயன்றபோது தப்பித்துவிட்டார். பாதுகாவலர்கள் அந்தப் பெண்ணை சுற்றிப் பிடிக்கையில் இரண்டாவது குண்டு சுடப்பட்டு அதுவும் அதிபரின் மேல் தாக்கவில்லை.

துப்பாக்கியால் சுட்ட பெண்மணி சிறையில் அடைக்கப்பட்டு 2007 ஆம்

ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

**ரொனால்ட் ரீகன் (40 ஆவது ஜனாதிபதி)**

ரொனால்ட் ரீகன் (Ronald Reagan) மார்ச் 30, 1981 அன்று வாஷிங்டனில் மக்கள் கூட்டத்தில் பேசிமுடித்து தனது வாகனம் நோக்கி நடந்து செல்கையில் கூட்டத்திலிருந்த ஜோன் ஹின்க்ளி (John Hinckley) என்ற நபரால் சுடப்பட்டார். அவருடன் சேர்த்து அவரது செயலாளர் ஜேம்ஸ் பிராடி (James Brady) உட்பட மூன்று பேர் சுடப்பட்டனர்.

அந்தத் தாக்குதலில் இருந்து ரீகன் மீண்டுவந்தார்.

துப்பாக்கியால் சுட்ட நபரான ஹின்க்ளி கைது செய்யப்பட்டு மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால் மனநல மருத்துவமனையில் அடைக்குமாறு உத்தரவிடப்பட்டது. பின்னர், 2022 ஆம் ஆண்டு அவருக்கு மற்றவர்களால் ஆபத்து நேராது என்று முடிவு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

**ஜோர்ஜ் புஷ் (43 ஆவது ஜனாதிபதி)**

ஜோர்ஜ் புஷ் (George W. Bush) 2005 ஆம் ஆண்டு மே 10ஆ திகதி ஜோர்ஜியா (Georgia) இல் அந்த நாட்டு ஜனாதிபதி மிகைல் சாகஷ்விலி (Mikheil Saakashvili) உடன் பேரணியில் கலந்து கொண்டபோது அவரை நோக்கி கையெறி குண்டு வீசப்பட்டது.

ஜனாதிபதிகள் இருவரும் குண்டு துளைக்காதத் தடுப்புக்குப் பின் இருந்தனர். அந்த குண்டு 100 அடி தூரத்தில் வீசப்பட்டு வெடிக்காமல் போனதால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

குற்றவாளி விளாதிமர் அருத்யுனியன் (Vladimir Arutyunian) என்பவர் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

**தியோடர் ரூஸ்வெல்ட் (ஜனாதிபதி வேட்பாளர்)**

25, 26 ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) 1912 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ந் திகதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்காக மிலவாக்கே (Milwaukee) இற்கு வந்தபோது சுடப்பட்டார்.

இருமுறை அதிபராக இருந்த ரூஸ்வெல்ட், மூன்றாவது முறையாக மூன்றாம் தரப்பு வேட்பாளராகப் போட்டியிட்டார்.

ரூஸ்வெல்ட்டின் சேர்ட் பொக்கெற்றில் இருந்த மடிக்கப்பட்ட காகிதங்களும், கண்ணாடிப் பெட்டியும் இருந்ததால் அவருக்கு கடுமையாகக் காயங்கள் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் ஜோன் ஷ்ராங் (John Schrank) என்பவர் கைது செய்யப்பட்டு மனநலக் காப்பகத்தில் தன் வாழ்நாளைக் கழித்தார்.

**ஜோர்ஜ் சி. வாலஸ் (ஜனாதிபதி வேட்பாளர்)**

ஜோர்ஜ் சி. வாலஸ் (George C. Wallace) குடியரசு கட்சியின் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட பின், லௌரல் (Laurel) என்ற நடந்த பிரச்சாரக் கூட்டத்தில், 1972 ஆம் ஆண்டு மே 15ந் திகதி மர்மநபரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். இந்தத் தாக்குதலால் அவரது இடுப்புக்குக் கீழுள்ள பகுதி செயலிழந்தது.

அலபாமா (Alabama) பகுதி ஆளுநரான ஜோர்ஜ் வாலஸ் பிரிவினைவாதக் கருத்துகளுக்குப் பெயர்பெற்றவர். பிற்காலத்தில், அதனை மாற்றிக் கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் ஆர்தர் பிரேமர் (Arthur Bremer) என்ற குற்றவாளி கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், 2007 இல் அவர் விடுவிக்கப்பட்டார்.

***ஆதாரம்: தினமணி, விக்கிபீடியா***

# சிவாஜிலிங்கம் மீது இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

**இ**ந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சில அரசியல்வாதிகளையும், சில புலம்பெயர் தமிழர் அமைப்புகளையும் கொண்ட “மாபியா மோசடிக் கும்பலிடம்” ஏமாற வேண்டாம் என விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிரபாகரனின் மூத்த சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரனின் மகன் கார்த்திக் மனோகரன் (Karthic Manoharan) ‘டெயிலி மிரர்’ பத்திரிகையிடம் தெரிவிக்கும் போது, இவ்வாறு மோசடித்தனமாகச் சேகரிக்கப்படும் பணம் ‘உயிருடன்’ இருக்கும் பிரபாகரனின் குடும்பத்துக்கோ அல்லது வடக்கில் உள்ள வறுமையால் வாடும் மக்களுக்கோ செல்வதில்லை எனக் கூறினார்.

இந்தியத் தலைவர்களான நெடுமாறன், காசி ஆனந்தன் மற்றும் முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அரசியல், பொருளாதார ஆதாயங்களைப் பெறுவதற்காக இறந்துபோன தனது சிறிய தந்தை பிரபாகரனின் குடும்பப் பெயரைப் பயன்படுத்துவதாக பிரபாகரனின் பெறாமகன் கார்த்திக் மனோகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இறந்து போனவர்களுக்குச் செலுத்தும் மரியாதையாக உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் இந்த மோசடிக்காரர்கள் அனாதரவற்ற தமிழ் மக்களுக்கு உதவுவதாகச் செய்யும் போலிப் பிரச்சாரங்களை நம்ப வேண்டாம் எனவும் அவர் கூறினார்.

தமிழ் குழுக்களின் நடவடிக்கைகள் மீது அதிருப்தி வெளியிட்ட கார்த்திக் மனோகரன், இலங்கை அரசாங்கம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

டென்மார்க்கில் கடந்த 26 வருடங்களாக வாழும் கார்த்திக் மனோகரன் மேலும் கூறுகையில், கடைசி யுத்தம் நடைபெற்ற 2009ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சேகரித்த பணம் தனது சிறிய தந்தை பிரபாகரனின் குடும்பத்தைப் பராமரிப்பதற்காக பயன்படுவதாக புலம் பெயர் நாடுகளில் உள்ள மோசடிக் கும்பல்கள் கூறி வருகின்றன.

“ஆனால், எனது சிறிய தகப்பனார் பிரபாகரனின் முழுக் குடும்பமும் இறுதி யுத்தத்தின் போது இறந்துவிட்டனர். தயவு செய்து அவர்களது மரணத்துக்கு மதிப்பளியுங்கள்” எனக் கூறினார்.

“பிரபாகரன் சிங்கள மக்களை வெறுக்கவில்லை. உதாரணமாக, இலங்கை கிரிக்கெற் அணியினர் இந்தியா அல்லது வேறு நாடுகளுக்கெதிராக விளையாடும் போது பிரபாகரன் இலங்கை அணியினரையே எப்போதும் ஆதரித்தார்” என கார்த்திக்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்ட பாஸ்டில் சிறை தகர்ப்பு

மனித குல வரலாற்றில் ஜூலை14, 1789 மிகவும் முக்கியமான ஒரு தினமாகும். பாரிஸ் நகர மக்கள் பாஸ்டில் (Bastille) சிறைக் கதவுகளை உடைத்து அரசியல் கைதிகளை விடுவித்த தினம். பிரெஞ்சு புரட்சியின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் இது ஒன்றாகும்.

1789 இல் அரங்கேறிய பிரெஞ்சு புரட்சி முக்கியத்துவம் வாய்ந்த நவீன கால புரட்சியாகும். அனைத்து மக்களும் சமம் என்று அது முழங்கியது. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கங்களை முன்வைத்தது. இது மானுட சிந்தனை வரலாற்றில் ஒரு மிகப் பெரிய முன்னேற்றம். ஆகவே, இன்றும் நம்மைப் போன்ற ஜனநாயக இயக்கங்கள் பிரெஞ்சு புரட்சியையும், அதன் நிகழ்வுகளில் ஒன்றான பாஸ்டில் சிறை தகர்ப்பு நாளையும் நினைவு கூருகின்றோம்.

அதே சமயம் பிரெஞ்சு புரட்சியின் வரம்புகளையும் வர்க்கத்தன்மையையும் எங்கள் ஆசான்கள் மார்க்சும், எங்கல்சும், லெனினும் சரியாகவே சுட்டிக்காட்டினார்கள்.


"பிரெஞ்சு புரட்சி ஒடுக்கப்பட்ட போதிலும், வரலாற்றை படிக்கும் ஒவ்வொருவரும் அதை வெற்றிகரமானதென்றே கருதுகின்றனர். இந்த பிரெஞ்சு புரட்சி பூர்ஷ்வா ஜனநாயகம் மற்றும் பூர்ஷ்வா சுதந்திரத்திற்கு அடித்தளம் இட்டது." என்று கூறினார் லெனின்.

"பிரெஞ்சு புரட்சி ஒரு பூர்ஷ்வா புரட்சி என்பதி ஐயமில்லை. அதனுடைய தன்மை பூர்ஷ்வா அடிப்படையில் அமைந்தது. பூர்ஷ்வா தன்மை கொண்டதாக இருந்ததால், சமூகத்தின் உழைக்கும் மக்களை அது சுரண்டலிலிருந்து விடுவிக்க வில்லை." என்று தெளிவாக சொன்னார் மார்க்ஸ்.

**பாஸ்டில் தினம்–பின்னணி**

பாஸ்டில் சிறை என்பது பாரிஸ் நகரின் கிழக்கு பகுதியில் உள்ள ஒரு கோட்டை மட்டுமல்ல, அந்நாட்டின் பிரதான சிறையும் ஆகும். அரசியல் கைதிகளை அடைக்கும் இடம் என்பதுடன் மன்னராட்சியின் அடையாளமாகவும் அது கருதப்பட்டது.

1688 முதல் 1783 வரை பிரான்சும் பிரிட்டனும் ஐந்து நீண்ட போர்களில் ஈடுபட்டன. இதன் விளைவாக அரசின் திறைசேரி காலியாகி இருந்தது. அரசின் வரிக் கொள்கையால் ஏற்கனவே கடும் சுமையால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மீது அரசு மேலும் கடும் சுமையை ஏற்றியது.



16 ஆம் லூயி (Louis) மன்னனின் வரிக்கொள்கையை எதிர்த்த நிதி அமைச்சர் ஜாக்ஸ் நேக்கர் (Jacques Necker) மக்கள் மத்தியில் பிரபலமானார்.

***இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), புதுச்சேரி***

அன்று பிரெஞ்சு சமூகம் மூன்று பிரிவாக (Three Estates) பிரிக்கப்பட்டிருந்தனர்:

1. அரச குடும்பத்தின் ஆதரவாளர்களான பெரும் நிலக்கிழார்கள், ரோமன் கத்தோலிக்க ஆலயத்தின் குருக்கள்
2. அதிகாரம் செலுத்துவோர்
3. சிறு வணிகர்கள், விவசாயிகள், உழைப்பாளிகள், சாதாரண மக்கள்

என பிரிக்கப்பட்டிருந்தனர். அரசகுடும்பம் இந்தப் பிரிவுகளில் அடக்கப்படவில்லை.

பிறப்பு அடிப்படையில் அனைத்து சலுகைகளும் தீர்மானிக்கப்பட்டதால், ஏழைகள் முன்னேற வழியே இல்லாத சூழல் நிலவியது. சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால், மக்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர். மன்னன் 19.5.1789 அன்று பொது குழுவை கூட்டினான். மூன்றாம் பிரிவு (மக்கள்) தேசிய அசெம்பிளியை உருவாக்குவதாக அறிவித்தான்.

11.7.1789 நிதி அமைச்சர் மன்னரால், பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன் பின் மன்னரின் இராணுவம் தங்களை தாக்கக்கூடும் என்ற அச்சத்தில், மக்கள் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பாஸ்டில் சிறையை முற்றுகை இட்டனர். அந்த கலவரத்தில் பலர் உயிரிழந்தனர். இறுதியில் பாஸ்டில் சிறை மக்கள் வசம் வந்தது.

இந்த சம்பவம் "மன்னராட்சியின் நிறமான வெள்ளையை, மக்களின் நிறங்களான நீலமும், சிவப்பும் சூழ்ந்தது" என்று வர்ணிக்கப்பட்டது. இன்றும் அந்நாட்டின் கொடியில் அந்த மூன்று நிறங்களும் இருப்பதை காண முடியும். 04.08.1789 அன்று நிலபிரபுத்துவம் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, 'மனித/குடிமக்களின் சாசனம்' பிரகடனப்படுத்தப்பட்டது.

21.9.1792 அன்று பிரான்ஸ் குடியரசு என்று அறிவிக்கப்பட்டு லூயி மன்னன் கழுவிலேற்றப்பட்டான்.

கில்லட்டின் (Guillotine - கழுவேற்றப் பயன்படுவது), பிஜியன் குல்லாய் (Phrygian cap - விடுதலையின் அடையாளம்) நீலம் சிவப்பு வெள்ளை நிறங்களைக் கொண்ட கொடி, தேசிய கீதம் ஆகியவை பிரெஞ்சு புரட்சியின்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ளது.

அதேபோல, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டு அதிலிருந்து பிரிந்து சென்ற மகிந்த ராஜபக்ஸ தலைமையில் 'சிறீலங்கா பொதுஜன பெரமுன' என்ற புதிய கட்சி உருவாகிற்று.

அதுமாதிரி, ஜே.வி.பி. பிளவுபட்டு அதிலிருந்து பிரிந்து சென்ற குமார் குணரத்தினம் என்பவர் தலைமையில் 'முன்னிலை சோசலிசக் கட்சி' என்ற புதியதொரு கட்சி தோற்றம் பெற்றது.

இந்தப் பிளவுகளில் ஜே.வி.பி. தவிர மற்றைய இரு கட்சிகளான ஐ.தே.க. மற்றும் சுதந்திரக் கட்சி என்பனவற்றிலிருந்து பிரிந்து சென்ற அணிகள் பழைய கட்சிகளைப் பின்னுக்குத் தள்ளி மக்கள் செல்வாக்குடன் முன்னுக்கு வந்தன. சிறீலங்கா பெரமுன குறுகிய காலத்தில் மக்கள் செல்வாக்குப் பெற்று ஜனாதிபதி அதிகாரத்தையும், நாடாளுமன்ற அதிகாரத்தையும் கூட கைப்பற்றியது.

இந்தமுறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியோ அல்லது அதிலிருந்து உருவான பொதுஜன பெரமுனவோ போட்டியிடாத ஒரு சூழல் நிலவுகிறது. இது முன்னொருபோதும் இல்லாத சூழல். சுதந்திரக் கட்சி இலங்கையின் தேசிய முதலாளித்துவத்தின் பிரதிநிதி என்று சொல்லப்படுவதுண்டு. அதிலிருந்து உருவான பொதுஜன பெரமுனவும் ஏறத்தாழ அந்த வர்க்கத்தின் பிரதிநிதிதான்.

அப்படிப் பார்க்கையில், சுதந்திரக் கட்சியோ அல்லது பொதுஜன பெரமுனவோ தேர்தலில் போட்டியிடாதது, இலங்கையில் வர்க்க அடிப்படையில் தேசிய முதலாளித்துவத்தின் இருப்பு அல்லது வகிபாகம் முடிந்து விட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது. அது மாத்திரமின்றி, இலங்கையில் பெரு முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக நீண்ட காலம் இருந்த ஐ.தே.க. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன ஆதரிக்கத் தயாராகி வருவது, முதலாளித்துவ சக்திகளின் வர்க்கப் பிரிவினை மறைந்து வருகிறதா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

இந்தச் சூழ்நிலை தொடருமா அல்லது பெரு முதலாளித்துவத்தின் இன்னொரு பிரதிநிதியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஐ.தே.கவும் மீண்டும் ஒன்றுசேர, தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரக் கட்சியும் மொதுஜன பெரமுனவும் மீண்டும் ஒன்று சேருமா என்பதும் கேள்வியாகத் தொக்கி நிற்கிறது. எதிர்காலம்தான் அதற்கான பதிலை வழங்க வேண்டும்.

ஜே.வி.பியை பொறுத்தவரை இலங்கையின் குட்டி முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக இருப்பதால், சமூகத்தில் அதற்குரிய சிந்தனை ஆதிக்கம் இருந்தாலும், அதற்கு பொருளாதார அடித்தளம் பலமாக இல்லாதபடியால், அதற்குள் ஏற்பட்ட பிளவு அதற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இருந்தாலும் அதன் வர்க்கப் பலவீனம் ஜனாதிபதி தேர்தலிலும் பிரதிபலிக்கும்.

இந்த தென்னிலங்கை கட்சிகள் மத்தியில் வர்க்க அடிபபடையில் அல்லது சாதி அடிப்படையில் அல்லது அரசியல் அடிப்படையில், வேறுபாடுகள் இருப்பினும், அவற்றுக்குள் ஒரு விடயத்தில் மட்டும் ஒத்த கருத்தே அதாவது உடன்பாடான கொள்கையே உள்ளது. அதாவது, சிங்கள தேசியவாதம் என்பதில் அவற்றுக்குள் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. இருப்பதெல்லாம் அதை அணுகுவதில் உள்ள நடைமுறை அல்லது தந்திரோபாயப் பிரச்சினை மட்டுமே. இலங்கையின் பிரதானபிரச்சினைகளுள் இனப்பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை என்றபடியால், சிறுபான்மை இனங்கள் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது அவசியம்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சி வேட்பாளர்களிடம் இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வு எதுவும் இல்லை என்பதை இந்த உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கிறது. அவர்கள் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்வது போல சால்ஜாப்பு காட்டினாலும், அதைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதே உண்மையாகும்.

இலங்கையின் இன்னொரு பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை ஆகும். இந்தப் பிரச்சினை இலங்கையில் இரு தடவைகள் ஆக்ரோசமாக மேலெழுந்துள்ளன.

முதலாவது தடவை, 1953ஆம் ஆண்டு அப்பொழுது பதவியில் இருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கு எதிராக அது 'ஹர்த்தால்' என்ற பெயருடன் வெடித்துக் கிளம்பியது. அதனால் பிரதமர் டட்லி சேனநாயக பதவியைத் துறந்து ஓட வேண்டி ஏற்பட்டது.

இரண்டாவது தடவை, 2002இல் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஏற்பட்ட மக்கள் எழுச்சி. இந்தத் தடவையும் கோத்தபாய தனது ஜனாதிபதி பதவியைத் துறந்து ஓட வேண்டியதாயிற்று.

இந்த இரண்டு மக்கள் போராட்டங்களினதும் விளைவுகளையும் நாம் அவதானிப்பது மிகவும் முக்கியம். அதாவது, இந்த இரண்டு போராட்டங்களினதும் விளைவாக ஆட்கள் மாறினார்களே தவிர (டட்லியும் கோத்தாவும்) தவிர ஆட்சியோ அல்லது ஆட்சியின் தன்மையோ மாறவில்லை. அதற்கு சில காரணங்கள் உண்டு.

அதாவது, 1953 ஹர்த்தால் போராட்டத்தை இடதுசாரிகள் தலைமையேற்று நடத்தினாலும், மக்கள் இவ்வளவு எழுச்சி கொள்வார்கள் என்றோ, அரசாங்கம் கவிழும் என்றோ அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அதனால் அடுத்து என்ன செய்வதென்ற வழி தெரியாமல் இடதுசாரிகள் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டார்கள்.

2022ஆம் ஆண்டு போராட்டத்தைப் பொறுத்தவரை, தன்னெழுச்சியான மக்கள் போராட்டமாக அது ஆரம்பித்து, பின்னர் ஏகாதிபத்திய சக்திகளின் அனுசரணை பெற்ற அரச சார்பற்ற அமைப்புகளால் அது கையகப்படுத்தப்பட்டதால், அந்தப் போராட்டமும் ஆள் மாற்றத்துடன் முடிந்து போனது. இந்தப் போராட்டமும் சமூக மாற்றத்தை விரும்பும் உண்மையான புரட்சிகர சக்திகளுக்கு ஒரு பாடமாகும்.

இலங்கையின் இன்னொரு பிரதான பிரச்சினை நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையாகும்.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த ஆட்சி முறையினைக் கொண்டுவந்த பொழுது அநேகமாக இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் அதை எதிர்த்தன. ஆனால் அவருக்குப் பின்னர் ஜனாதிபதியாகத் தெரிவானவர்களுள் ஆர்.பிரேமதாசவைத் தவிர அனைத்து ஜனாதிபதிகளும் – சந்திரிக, மகிந்த, மைத்திரிபால, கோத்தபாய என அனைவருமே "நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம்" என தேர்தல்

காலங்களில் வாக்குறுதி அளித்தார்களே தவிர, பதவிக்கு வந்ததும் அதை அகற்றுவதற்கான ஒரு சிறு முயற்சியைத் தன்னும் செய்யவில்லை

இப்பொழுது புதிதாக அடுத்த ஜனாதிபதியாக வரலாம் எனக் கனவு காணும் ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசாநாயக்க, தாம் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை நிச்சயமாக அகற்றுவோம் எனக் கூறி வருகின்றார்.

அது பொய் என்பதற்கு ஓர் உதாரணம், தான் ஆட்சிக்கு வந்ததும் நாடாளுமன்றம் உடனும் கலைக்கப்படும் என்றும் கூறுகின்றார். ஆனால் இலங்கையின் அரசியல் அமைப்பின் பிரகாரம், நாடாளுமன்றத்தை அதன் ஆயுள் காலம் பூர்த்தியடைவதற்கு முன்பாகக் கலைப்பது என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் ஆதரவு தேவை. அவ்வாறில்லாமல் கலைப்பதானால், ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே கலைக்க முடியும். அனுரவின் கூற்றைப் பார்த்தால், அவர் ஜனாதிபதியாகத் தெரிவானால் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே நாடாளுமன்றத்தைக் கலைப்பார் என்பது தெளிவாகின்றது.

எனவே, இன்றைய நிலையில் மூன்று விடயங்கள் தெளிவாகின்றன.

அதாவது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடமும், பொருளதாரப் பிரச்சினைத் தீர்வுக்கோ, இனப்பிரச்சினைத் தீர்வுக்கோ திட்டங்கள் எதுவும் இல்லை என்பதுடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டும் எண்ணமும் இல்லை என்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதை முடிவு செய்வதற்கு முன்னர், இந்த மூன்று விடயங்களிலும் வேட்பாளர்களின் வங்குரோத்து நிலையை மக்கள் கணக்கில் எடுப்பது அவசியமானது.

அதேநேரத்தில், இலங்கை அரசியல் அமைப்பின்படி, ஒருவர் விரும்பினால் யாருக்கும் வாக்களிக்காமல், தேர்தலில் போட்டியிடும் வாக்காளர்கள் மீதான அவநம்பிக்கையையும், தேர்தல் முறை மீதான அவநம்பிக்கையையும் தெரிவிக்க முடியும் என்பதையும் வாக்காளர்கள் மனதில் கொள்ளலாம்.

---

முதலாளித்துவ பொது நெருக்கடி அதிகரித்து வருகையில், அதற்கு எதிரான, புரட்சியை தவிர்ப்பதற்காக முதலாளித்துவம் பாசிசத்தில் புகலிடம் தேடுகிறது. சோசலிசப் புரட்சியை நெருங்கும்போதுதான் பாசிசம் தாக்குதலை தொடங்கும் என நினைப்பது தவறு. உண்மையில் அதற்கு முன்பே தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களை தாக்கி அழித்து விட பாசிசம் முயல்கிறது. நிதி மூலதனத்தின் கடைக்கோடி பிற்போக்கும், கடைக்கோடி இனவெறியும், கடைக்கோடி ஏகாதிபத்திய தன்மையும் கொண்ட பகுதிகளின், பகிரங்கமான, பயங்கரவாத, சர்வாதிகார முறையே பாசிசம்.

பாசிசம், இரத்தவெறி பிடித்த ஏகாதிபத்திய வேட்டை விலங்கு. பாசிசம் முதலாளித்துவ ஜனநாயகத்தை தாக்குகிறது. உழைக்கும் மக்கள் மீதான அநாகரிகமான சுரண்டல் ஆதிக்கத்தை நிலைநாட்டவும், உழைக்கும் மக்களை நசுக்கவும் முயல்கிறது.

பாசிஸ்டுகளின் தேசியவெறி மற்றும் இனவெறி சித்தாந்தத்தையும், அவர்களை பின்னணியில் இருந்து இயக்கும் நிதி மூலதனத்தையும், மக்களிடம் தோலுரித்து காட்டுவதின் மூலமே பாசிசத்தை வெற்றி கொள்வதற்கான இலக்கை அடைய முடியும்.

**–ஜோர்ஜ் டிமிட்ரோ**

---

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

தெரிவித்தார்

ஏறத்தாழ 40 வருடங்களாக மௌனமாக இருந்த மனோகரன் குடும்பத்தினர், மோசடிக்கார புலம்பெயர் தமிழ் குழுக்கள் சில உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் சிரமப்பட்டு உழைக்கும் பணத்தை பிரபாகரனின் பெயரால் சூறையாடுவதைத் தடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். 2023 நொவம்பர் 27 மாவீரர் தினத்தன்று பிரபாகரனின் மகள் துவாரகா என்று ஒரு பெண்ணைப் போலியாகக் கொண்டு வந்து 'மாவீரர் உரை' நிகழ்த்திய சம்பவத்தைத் தொடர்ந்து, உண்மையை உலகிற்குச் சொல்வது எனவும், பிரபாகரனின் பெயரால் நடைபெறும் மோசடிகளை அம்பலப்படுத்துவதெனவும் அவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

(1980 ஆம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் பிறந்த காரத்திக் மனோகரன் தற்போது டென்மார்க்கில் ஆங்கில ஆசிரியராக பணி புரிந்து வருகிறார்.

SUSITHA FERNANDO என்பவர் 'டெயிலி மிரர்' பத்திரிகைக்காக கார்த்திக் மனோகரனிடம் எடுத்த பேட்டியின் சாராம்சம் இது. முழுப்பேட்டியினதும் காணொலி: https://www.youtube.com/watch?v=Io6HbhYTNFY&t=58s)

---

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

அடையாளங்களாக கருதப்படுகின்றன.

**பூர்ஷ்வா புரட்சியின் எல்லைகள்**

பிரெஞ்சு புரட்சி "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கங்களை ஒரு புறம் முன்வைத்தாலும், அந்நாட்டின் செல்வந்தர்கள், ஆளும் வர்க்கங்கள், கறுப்பின மக்களை அடிமைகளாக, அமெரிக்காவிற்கு அனுப்பிய வர்த்தக ஏற்பாட்டில் பங்குபற்றியது. பின்னர் 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சு முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக வளர்ந்து, ஏகாதிபத்திய முகாமின் வலுமிக்க அங்கங்களில் ஒன்றாகவும் செயல்பட்டதையும் நாம் நினைவில் கொள்வோம். இந்தோ சீனத்தில், (வியத்னாம், லாவோஸ், கம்போடியா), அல்ஜீரியாவில் இன்னும் பல ஆபிரிக்க, மேற்கு ஆசிய நாடுகளில் பிரெஞ்சு முதலாளி வர்க்கம் நடைமுறைப்படுத்திய சுரண்டலும், மனித உரிமை படுகொலைகளும், ஒரு "பூர்ஷ்வா புரட்சியின்" வரலாற்று வரம்புகளை நமக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகின்றன. இன்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் உலகளவிலான சுரண்டலுக்கு பக்கபலமாக உள்ளது

சோசலிசமே மானுட விடுதலையை நனவாக்கும். பிரெஞ்சு புரட்சி மானுட விடுதலைக்கான நெடிய பயணத்தில் முக்கியமான மைல்கல். ஆனால், அப்பயணத்தை முன்பின் முரணற்று முன்னெடுத்து சென்று முழுமையான மானுட விடுதலையை சாதிப்பது, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான சோஷலிச புரட்சியால் மட்டுமே நிகழும். பாஸ்டில் சிறை தகர்ப்பை மக்கள் எழுச்சி என்று போற்றுவோம். முதலாளி வர்க்கத்தின் ஆட்சியில் மானுட விடுதலை சாத்தியம் இல்லை என்ற தெளிவுடன் சோஷலிச புரட்சியை முன்னெடுத்து செல்லுவோம்.!

# ஜூலியன் அசாஞ்சே விடுதலையின் அர்த்தம் என்ன?


“**விக்கிலீக்ஸ்**” நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே (WikiLeaks founder Julian Assange) அமெரிக்க அதிகாரிகளுக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு சமரச உடன்பாட்டின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். பைடன் நிர்வாகம் இந்த விவகாரத்தை அவமானகரமான முறையில் கையாண்ட போதிலும், இவ்வாறான ஒரு நிலைமை உருவானது பத்திரிகைச் சுதந்திரத்தை நேசிக்கும் அனைவருக்கும் ஓர் ஆறுதலாகும்.

அசாஞ்சே பிரித்தானியாவிலிருந்து புறப்பட்டு பசுபிக்கில் உள்ள அமெரிக்கப் பிரதேசம் ஒன்றில் உள்ள நீதிமன்றமொன்றில் முன்னிலை அளிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார். அடுத்த நாள் அவர் சுதந்திர மனிதனாகி, தனது சொந்த நாடான அவுஸ்திரேலியாவுக்கு நம்பிக்கையுடன் திரும்பினார்.

இலண்டனில் உள்ள ஈகுவடோர் (Ecuador) தூதரகத்தில் ஏழு வருடங்கள் புகலிடம் கோரி இருந்த பின்னர், பெல்மார்ஸ் சிறையில் (Belmarsh Prison) கடுமையான நோய்களுடன் ஐந்து வருடங்களாக இருந்த அசாஞ்சேக்கு இந்தச் சமரசம் ஓர் ஆறுதல்தான். பைடன் நிர்வாகம் அசாஞ்சேயை லண்டனிலிருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்த எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

ஆனால் இது பத்திரிகை சுதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி அல்ல. இந்தத் தீர்மானம் நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக வராதபடியால் ஊடகவியலாளர்களால் நிம்மதி மூச்சு விட முடியாது. நீதிமன்றத் தீர்ப்புக்குப் பதிலாக அதிகாரத்தின் மூலம் இத்தகைய முடிவுகள் எடுக்கப்படுவது எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வழக்குகளில் முன்மாதிரியாக அமையக்கூடும்.

அசாஞ்சேயை சமரசத்துக்கு உடன்படும்படி அமெரிக்க நீதித்துறை திணைக்களம் நிர்ப்பந்தித்தது உளவு சம்பந்தமான சட்டத்தை மீறும் செயலாகும். வருங்காலத்தில்



நீதிமன்றங்களுக்கு இது ஓர் அபாயகரமான முன்மாதியாக அமையக்கூடும். வருங்காலத்தில் சமஸ்டி வழக்குரைஞர்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வழக்குகளில் இதையொரு வெற்றிகரமான மாதிரியாக பார்க்கக்கூடும். இதனால் ஊடகவியலாளர்களின் சட்ட செயற்பாட்டாளர்கள் ஊடக செயல்பாடுகளுக்கு இதுவொரு அச்சுறுத்தல் என அஞ்சக்கூடும்.

பிராட்லி பிளங்கன்ஸிப்
(Bradley Blankenship)

இது பொதுவானதல்ல. எதிர்கால அமெரிக்க நிர்வாகங்கள் புலனாய்வு சட்டத்தின் கீழான இந்த சமரச உடன்பாட்டை வைத்துக்கொண்டு ஊடகவியலாளர்களைத் தண்டிக்க முடியும். உதாரணமாக, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது பிரச்சாரத்தின் போது, பத்திரிகைகள் “மக்களின் எதிரிகள்” எனப் பகிரங்கமாகக் கூறினார். இந்தக் கருத்தை ஜனநாயகக் கட்சியினரும் அடிக்கடி தூக்கிப் பிடித்தனர். எதிர்கால நிர்வாகங்கள் அமெரிக்க ஜனநாயகத்தை கீழ்மைப்படுத்தும் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதத்தை வெள்ளை மாளிகை ஒரு பரிசாக வளங்கியுள்ளமை தவறானது.

இத்தகைய காரணங்களால் இந்த விடயத்தில் பைடன் நிர்வாகத்தின் முடிவைப் பாராட்ட முடியாது. அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்த விடயத்தை தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யும்படி பிரதான சிவில் குடிமையாளர்களும், மனித உரிமை குழுக்களும் திரும்பத் திரும்பக் கோரி வந்தன. ஆனால் அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்களைப் பெறுவதும், அதைப் பிரசுரிப்பதும் குற்றம் என நீதிமன்றம் குறிப்பிட்டு, அசாங்கே அதற்குரிய தண்டனைக் காலத்தை சிறையில் கழித்த பின்னர், இன்று அந்த விடயத்தைத் தள்ளுபடி செய்துள்ளனர்.

இது சரியான பாதையிலிருந்து ஒரு இலேசான விலகல் எனக் கொள்ளலாம். அதிகாரம் நியாயமான பொறுப்புக் கூறல் மற்றும் நிர்வாக பொறுப்பு என்பனவற்றால் கட்டாயமாக பரிசீலிக்கப்பட வேண்டும். இந்த நிலைமையில் எதிர்கால நீதித்துறை திணைக்களங்கள் சாதாரண ஊடகவியல் நடவடிக்கைகளையும் குற்றமாகக் காண முடியும்.

அசாஞ்சே அவருக்கு தகுதியானதைப் பெற்றார் அல்லது அவர் உண்மையில் ஒரு பத்திரிகையாளர் அல்ல என்று சிலர் கூறலாம். இது பெரும்பாலும் அசாஞ்சேயின் பிரச்சாரம் ஊடகங்களில் ஏனையவர்களை எண்ணிலடங்காத வகையில் பாதிக்கும் என்ற சங்கடமான உண்மையின் ஒரு பிரதிபலிப்பு ஆகும்.

(இந்தக் கட்டுரையாளர் Bradley Blankenship, CGTN – China Global Television Network - செய்திச் சேவைக்கு நடப்பு நிகழ்வுகள் குறித்த சிறப்பு விமர்சகராக இருக்கிறார். செக்கோஸ்சிலோவாக்கிய தலைநகர் பிராக்கை (Prague) தளமாகக் கொண்டு செயல்படும் அமெரிக்க ஊடகவியலாளரான இவர், அரசியல் விமர்சகராகவும், சுயாதீன நிருபராகவும் இருக்கிறார். இந்தக் கட்டுரை CGTN செய்திச் சேவையில் வெளிவந்த போதிலும், அதன் கருத்துகளை பிரதிபலிக்கிறது என்று கூற முடியாது என்றும், இவை முற்றிலும் அவரது சொந்தக் கருத்துகளே என்றும் அந்த செய்திச் சேவை தெரிவித்துள்ளது)